www.padippakam.com

# போராட்டத்துள் ஒரு போராட்டம்.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

ஆயுதம் மட்டும் அரசியலல்ல;
இளைஞர் மட்டும் மக்களல்ல.

மறுமலர்ச்சிக் கழகம்
யாழ் பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# போராட்டத்துள் ஒரு போராட்டம்

## சிறு முன்னுரை

- இது வரலாற்றின் ஒரு கட்டம்.
- நேற்றைய நிகழ்வுகள் நெஞ்சினில் கனத்தன.
- இன்றைய நிகழ்வுகள் சிந்திக்க வைத்தன.
- விளைவு இச்சிறு நூல்!

வெளியீட்டு இல:- 7
வெளியீடு - பங்குனி 1985

வெளியிடுபவர்கள்:-

மறுமலர்ச்சிக் கழகம்
யாழ்- பல்கலைக் கழகம்
யாழ்ப்பாணம்

விலை ரூபா 3 மட்டும்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

1

# போராட்டத்துள் ஒரு போராட்டம்------.

தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் சகல பிரச்சனைகளுக்குமான இறுதித் தீர்வு சோஷலிஸத் தமிழீழ அரசை அமைப்பதிற்தான் தங்கியுள்ளது. இதிலிருந்து நாம் விலகவும் முடியாது. திரும்பிப் போகவும் முடியாது. ஆயுதம் தாங்கிய போராட்டமில்லாமல் நாம் இதனை அடையவும் முடியாது. இதில் அபிப்பிராய பேதத்திற்கே இடமில்லை. ஆனால் இன்று ஆயுதம் தாங்கிய ஒரு பகுதி இளைஞர்கள் (யார் இவர்கள். ?) போராட்டம் என்று சொல்லிக் கொண்டு வெறும் அழிப்பு வேலைகளுக்கும், மக்களின் அன்றாட ஜீவாதார வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்யும் வேலைகளுக்கும் தலைமை தாங்குகிறார்கள். இதனையிட்டு நிதானமாக, மிகுந்த சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் சிந்திக்க வேண்டியுள்ளது. வைத்தியசாலைகள், தபால் தொலைத்தொடர்புச் சேவைகள், கூட்டுறவுச் சங்கங்கள், எரிபொருள் விநியோகம் மற்றும் சமூகசேவைத் துறைகள் தொடர்பாக ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் வெறும் அழிப்பு வேலைகளாகவும், மக்களின் அன்றாட ஜீவாதார வாழ்வை ஸ்தம்பிக்கச் செய்யும் செயல்களாகவும் காணப்படுகின்றன. மேலும் வாகனக்கடத்தல்கள், ஆட்கடத்தல்கள், பணயம் வைத்தல் என்பனவும் இந்த வகையில் வெறுப்பூட்டுவனவாய் அமைந்துள்ளன. எத்தகைய ஒரு மாற்று வழியுமில்லாமல், எத்தகைய ஒரு வழியைக்காட்டாமலும்; மேற்கொள்ளாமலும் இத்தகைய அழிப்பு வேலைகளுக்குத் தலைமை தாங்குவதன் மூலம் வரலாறு ஒருபோதும் முன்னேற முடியாது. மாறாக மக்கள் விரக்தியுற்றுப் போராட்ட இயக்கங்கள் மீது வெறுப்படைவார்கள். இத்தகைய இக்கட்டான சூழலில் சோர்வடையாது போராட்டத்தைப் பாதுகாத்து மேலும் முன்னேற வேண்டுமென்றும், அதற்கேற்ற வகையில் இத்தகைய அழிப்பு வேலைகளும் ஸ்தம்பித வேலைகளும் நிறுத்தப்பட வேண்டுமென்றும் இப்பிரசுரம் கோரி அவற்றிக்கான கருத்தைச் சமர்ப்பிக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது யார்? "விடுதலை இயக்கங்களா? அப்படியாயின் அந்த விடுதலை இயக்கங்களை எதிர்ப்போம் என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியிலிருந்து உதிக்கின்றது. ஆனால் இயக்கங்கள் தாம் இவனைச் செய்யவில்லை என்றும், தாம் இதற்கு பொறுப்பில்லையென்றும் ஆங்காங்கே பொறுப்பற்ற முறையில் கூறிக்கொள்கின்றன. இந்த நிலையில் யார் இவற்றைச் செய்கிறார்கள் என்ற கேள்வி மிக ஆழமாக எழுகின்றது. இவ்வளவு பெரியளவில் இத்தகைய அழிப்பு வேலைகளை இயக்கங்களல்லாது தனிப்பட்ட கொள்ளைக் கூட்டதால் செய்ய முடியுமா? என்பதை நம்பமுடியாமலுள்ளது. அவ்வாறு இயக்கங்களல்லாது தனிப்பட்ட கொள்ளைக் கூட்டத்தினால் இவை செய்யப்படுமாயின் இயக்கங்களைவிட பன்மடங்கு பலமுள்ளவையாக இத்தனிப்பட்ட கொள்ளைக் கூட்டங்கள் வளர்ந்து விட்டன என்பது தெளிவு. அப்படியாயின் இயக்கங்களுக்கெதிரான சவர்லில் கொள்ளைக் கூட்டங்கள், கைக்கூலிகள் வெற்றி பெற்றுவிட்டன. இயக்கங்கள் தோல்வியடைந்துள்ளன. ஆனால் இதனை நம்பமுடியவில்லை எனவே இத்தகைய குழப்பமான நிலையில் இவ்வழிப்பு வேலைகள் தொடர்பான ஓர் தெளிவான கண்ணோட்டத்தையும் அதற்கான தீர்வையும் ஓர் கருத்தாக முன்வைக்க வேண்டியுள்ளது.

இவற்றையிட்டு தெளிவான ஓர் கருத்திற்கு வருவதற்கு அடிப்படையிலிருந்து ஆராய வேண்டியுள்ளது. ஏன், எதற்காக இப்போராட்டம் தோன்றியது? போராட்டத்தை முன்னேற்றிச் செல்வதன் மூலம் சுபீட்சமடைய வேண்டுமா? அல்லது போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அடிமைகளாக வாழ வழிவகுப்பதா? இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அழிப்பு,ஸ்தம்பிதவேலைகள் போராட்டத்தை முன்னேற்றவா அல்லது பின்தள்ளவா உதவும்? இவை போராட்டத்தைப் பின்தள்ள உதவுமாயின் இவை தோன்றுவதற்கான காரணம் என்ன? இவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகள் என்ன? என்பன போன்ற விடையங்கள் இங்கு ஆராயப்படும்.

படிப்பகம்

www.padippakam.com



## ஏன், எதற்காக போராட்டம் தோன்றியது?--

சிங்கள பௌத்த மேலாதிக்கவாத ஒடுக்கு முறையின் விளைவால் அதனை எதிர்த்து எமது போராட்டம் தோற்றம் பெற்றது. ஒடுக்குமுறையிலிருந்து விடுதலை அடைந்து சோஷலிஸத் தமிழ் அரசை அமைத்துச் சுபீட்சமாக வாழ்வதை நோக்கமாகக் கொண்டதே எமது போராட்டமாகும். எமது வாழ்வு விடுதலைப் போராட்டத்தில் மட்டுமே தங்கியுள்ளது எனவே எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் அவற்றைக் கண்டு நாம் போராட்டத்தில் வெறுப்படையக் கூடாது. எத்தகைய நெருக்கடிகளையும் தடைகளையும் தாண்டிப் போராட்டத்தை மேலும் மேலும் முன்னேற்ற வேண்டும் என்பதில் மக்கள் அசையாத நம்பிக்கை கொள்ளவேண்டும். மக்கள் சக்தியால் எதனையும் வெல்ல முடியும். எமது வாழ்வில் எல்லாவற்றுக்கும் மேலானது, முதன்மையானதும் விடுதலைப் போராட்டமேயாகும். மற்றெல்லாம் இரண்டாம் தரமானது. எனவே எமது போராட்டத்தை பலவீனப் படுத்தக் கூடியதும் ஊறுபடுத்தக் கூடியதுமான நடவடிக்கைகளில் எம்மில் யாராவது ஈடுபடலாமா? நிச்சயமாக இல்லை. தெரிந்தோ, தெரியாமலோ மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் போராட்டத்தை முன்னேற்ற உதவுகின்றதா அல்லது பின்தள்ள உதவுகின்றதா என்பதைச் சரிவர ஆராய வேண்டும்.

## இவைகள் அழிப்பு வேலைகள் தான்--

முதலில் இங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விபரித்து இவை அழிப்பு வேலைகளா அல்லது இல்லையா? என்பதைத் தீர்மானித்து பின்பு இவ் வேலைகள் போராட்டத்தை முன்னேற்றுகின்றதா? அல்லது பின்தள்ளுகிறதா? என்பதை ஆராய்வோம். வைத்தியசாலைகள், தபால் தொலைத்தொடர்புச் சேவைகள், கூட்டுறவுச் சங்கங்கள், எரிபொருள் விநியோகம், பாடசாலைகள் மற்றும் சேவை வழங்கு துறைகள், கைத்தொழில் நிறுவனங்கள் என்பவற்றைப் பாதிக்கக் கூடிய, சீர்குலைக்கக் கூடிய வகையில் ஆயுதம் தாங்கிய இளைஞரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அழிப்பு வேலையின் பாற்பட்டதே. மேலும் ஆலயங்களில் கொள்ளை, வாகனக் கடத்தல்கள், ஆட்கடத்தலும் பணயம் வைப்பும், தனியாரிடம் கொள்ளை அடித்தலும், ஓர் பொறுப்புணர்ச்சி அற்றதும், போராட்டத்தை பின்தள்ளக்கூடியதுமான நடவடிக்கைகளாகும்.

படிப்பகம்

www.padippakam.com

## வைத்திய சாலைகளில் கைவைத்தல்--

வைத்தியசாலைகள் தொடர்பாக ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் நடவடிக்கைகள் காரணமாக வைத்தியசாலைகள் மிக விரைவில் மூடப்பட்டு விடும்போல் தெரிகிறது. அரச இராணுவத்தின் நிர்ப்பந்தம்ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் நிர்ப்பந்தம்என்பவைவற்றின் மத்தியில் வைத்திய நிபுணர்கள் விரக்தியுற்று நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். அற்ப நோயால் கூட மக்கள் சாக வேண்டிய நிலை ஏற்பட்டு வருகிறது. எதிரியால் மக்கள் கொன்றழிக்கப்படுவது போதாதென்று இந்த வகையிலும் மக்கள் சாவதற்கு வழிவகுக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள வைத்தியசாலைக்குச் சொந்தமான ஒன்பது வாகனங்கள் கடந்த மாதத்தில் மட்டும் கடத்தப்பட்டுள்ளன. இவற்றைச் சாட்டாக வைத்து அரசு மருந்து விநியோகத்தை வழங்காமலுள்ளது. வைத்தியசாலைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது மக்கள் மருந்து வகைகளுக்குப் பெரிதும் அவதிப்படுகிறார்கள். இயக்கங்கள் மீது சினம் கொள்கிறார்கள். இவை சம்பந்தமாக ஒரு சிறிய மாற்றுவழியைக் கூடக்காட்டாமல் இந்தகைய அழிப்பு வேலைகளை செய்வதற்கு யாருக்கும் உரிமையில்லை. துப்பாக்கியைத் தூக்கி தோளில் வைத்துக்கொண்டு பல்லக்கிலேறி ''நான் தான் ராஜா'' என்று கூறிக்கொண்டு வீதி வலம் வருவதால் மட்டும் மக்கள் வாழ்ந்து விட முடியாது. மக்களின் ஜீவாதார வாழ்வு தொடரக் கூடியவாறு அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். எப்போதும் ஒரு போராளி என்பவன் மக்களோடு நிற்கவேண்டும். மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்க வேண்டும். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும் ஒவ்வொரு நடவடிக்கையில் ஈடுபடும் போதும் எதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டும் வைத்தியசாலை வாகனங்களைக் கடத்திச் செல்வதால் மக்கள் வீணாக நோயால் சாகவேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகள் மக்களைக் கொலை செய்வதற்கு சமனானது. போராட்டத்தைக் குழி தோண்டிப் புதைப்பதற்குச் சமனானது. இப்படியானவர்கள் மக்களின் தேவைகளைப் பிரதிபலிக்காதவர்கள் என்பதைக் காட்டுவதாகும். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்பதைக் காட்டுவதாகும்

இன்று வைத்தியர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் இளைஞர்களால் கடத்தப்படுகின்றன. வைத்தியர்கள் அநாவசியமாக

www.padippakam.com



இம்சிக்கப்படுகிறார்கள். வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இதனையும் ஓர் காரணமாகக் கொள்கிறார்கள். இதனையிட்டுச் சற்று ஆலோசிப்போம். ஒரு வைத்தியன் என்பவன் அவனது கடமை ஒழுக்கத்தின்படி இருபத்திநான்கு மணித்தியாலத்தில் எந்த ஒரு நிமிடமும் அவன் தனது கடமைக்குரியவனாவான். இதனை விளக்குவதற்கேற்ற ஓர் உதாரணத்தைக் கூறுவதாயின் ஒரு வைத்தியன் தாலி கட்டுவதற்கு மணவறைக்குப் போய்விட்டான் என்று வைத்துக்கொள்வோம். அவன் பெண்ணின் கழுத்தில் கட்டுவதற்குத் தாலியை தூக்கும் தருணத்தில் ஒரு நோயாளி பற்றிய விசேட அழைப்பு அறிவித்தல் கிடைக்கின்றது என்றும் வைத்துக்கொள்வோம். அப்போது அவன் தூக்கிய தாலியை அப்படியே வைத்துவிட்டு உடனடியாகக் குறித்த நோயாளியை நோக்கி விரைய வேண்டியவனாவான். இது வைத்தியத் துறை சார்ந்த பிரதான ஒழுக்கத்தில் ஒன்று. இந்த ஒழுக்கத்தை வைத்தியர்கள் பேணுகிறார்களா, இல்லையா என்பது இரண்டாம் பட்ச விடயம். ஆனால் இவ்வாறு வைத்தியருடையதோ அன்றி அவர் தொடர்பான வாகனங்களையோ கடத்திச் செல்வதன் மூலம் இத்தகைய கடமை நிறைவேற விடாமல் தடுத்து நிறுத்துவதற்கான முதற் காரணகர்த்தாக்கள் இத்தகைய கடத்தற்காரர்கள்தான்.

இத்தகைய கடத்தல்களால் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாமல் ஒரு நோயாளி இறந்துவிடுவது சாத்தியமாகிறது. மேற்கைரோப்பிய நாடுகளைவிட மூன்றும் உலக நாடுகளில் இறப்பு விகிதம் அதிகமாக இருப்பதற்கு தொலை தொடர்பும், போக்குவரத்துச் சாதனங்களும் வளர்ச்சியடையாமையால் உரிய நேரத்தில் வைத்தியம் செய்யப்படாமை ஒரு காரணமாகும். பொதுவாக மூன்றும் உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் நாம் தொலைத் தொடர்புப் போக்குவரத்துச் சாதனங்களிற் போதிய வளர்ச்சி அடையாதவர்கள். அதிலும் இந்நாட்டில் நிலவும் எம்மீதான ஒடுக்கு முறையால் மேலும் எமது இச்சாதனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனையும் மீறி உள்ள ஒரு சில வசதிகளையும் கூட அழித்து விடுவதனால் நிலைமை மிகவும் மோசமடைகிறது.

சில இளைஞர்களிடம் பின்வரும் கருத்து நிலவுவதைக் காணக் கூடியதயதாய் உள்ளது. வைத்தியர்கள் மத்தியதர வர்த்தகத்தைச் சேர்ந்தவர்களென்றும், இவர்கள் போராட்டத்திற் பங்கெடுக்கத் தயங்குபவர்கள் என்றும், எனவே இவர்களின் வாகனங்களைக் கடத்துவதோ அன்றி அவர்களை இம்சைப்படுத்துவதோ தவறில்லையென்றும் கருதுகிறார்கள். இது தொடர்பாகப் பல விடயங்களை நாம் அவதானிக்கவேண்டும். ஒன்று தேசிய விடுதலைப் போராட்

படிப்பகம்

www.padippakam.com



டத்தில் மத்தியதர வர்க்கமும் முற்போக்கானது. இரண்டு இவர்களின் மத்தியதர வர்க்கக் குணம்சங்களைப் படிப்படியாக வென்றெடுத்து இவர்களை மக்களின் உணர்வுபூர்வத் தோழர்களாக மக்களுடன் இணைக்கவேண்டுமே தவிர இவர்களைப் பகைத்தோ, ஒதுக்கியோ தள்ளக்கூடாது. போராட்டத்தில் நாம் ஈடுபடத்தொடங்கும் போதே அல்லது முன்கூட்டியே புரட்சிகரமான சிந்தனையையும் நடைமுறையையுமுடைய வைத்தியர்களை வைத்துக்கொண்டு போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. அப்படி ஆரம்பிக்கவும் முடியாது. (போராளிகள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள் கூட புரட்சிகரச் சிந்தனையையும் அதற்குரிய பண்பாட்டையும் இன்னும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது) போராட்டத்தின் பாதைகளிற் படிப்படியாக இவர்கள் புரட்சிகரச் சிந்தனையையும் நடைமுறையையும் பெறுவார்கள். அவ்வாறு அவர்கள் பெறுதுவிட்டாலும் இந்த மத்தியதர வர்கத்திடமிருந்துதான் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இவர்களிடமிருந்துதான் சேவையைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டும்.

இவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளாமல் இவர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளாமல் நாம் வாழவும் முடியாது. புதிதாகப் புரட்சிகரம் மிக்க ஓர் வைத்தியர் அணியைத் தோற்றுவிக்கவும் முடியாது. எனவே அதி தீவிர வரண்டவாதங்களைக் கைவிட்டு சாத்தியமான நடைமுறைக்குகந்த சிந்தனைக்கு திரும்ப வேண்டும். மிகமிக நெருக்கடி நிறைந்த மிக இக்கட்டான கட்டங்களில் மிகுந்த சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் எத்தகைய இழப்புக்களையும் துச்சமென மதித்து மக்களுக்குச் சேவையாற்றும் பல வைத்தியர்கள் இந்த மண்ணிலுண்டு. வைத்தியசாலைகளும் அவை தொடர்பானவைகளும், வைத்தியர்களும் மக்கள் வாழ்வின் ஓர் உயிர்நாடியாகும். எனவே தயவுசெய்து அந்த உயிர்நாடியில் கைவையாதீர்கள்.

## வைத்தியர்களிடம் ஓர் வேண்டுகோள்!

எங்கள் அன்புக்குரிய வைத்தியர்களே! உங்களிடமும் ஓர் வேண்டுகோள். இந்த நாட்டின் இன்றைய நெருக்கடி காரணமாகவும், உங்கள் மீது அரச இராணுவத்தினர் புரியும் பாதிப்புக்கள் காரணமாகவும் இந்த நாட்டைவிட்டு நீங்களும் வெளியேறுதீர்கள். தய்வுசெய்து அவ்வாறு போகாதீர்கள். இந்த மக்களின் துயரங்களில் நீங்களும் பங்கெடுங்கள். இந்த மக்களோடு இருங்கள். இந்த மண்ணுக்குச் சேவை செய்யுங்கள். இந்த நெருக்

படிப்பகம்

www.padippakam.com



கடியான கட்டத்தில் இந்த நாட்டைவிட்டு ஓடுவீர்களாயின் அதற்காக எதிர்கால வரலாறு உங்களைக் கேலிசெய்யும். உங்கள் இரத்தமும் மக்களின் இரத்தத்தோடு இந்த மண்ணில் சங்கமமாகுமாயின் அதற்கான வரலாறு காலம் காலமாக உங்களுக்குத் தலைவணங்கும். சில இளைஞர்களின் சிறுபிள்ளைத்தனமான நடவடிக்கைகளைக் கண்டு நீங்கள் நாட்டைவிட்டு ஓடவேண்டியதில்லை. உள்ள சாத்தியமான சகல சக்திகளையும் பயன்படுத்தி நீங்கள் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். வெளிநாடுகளில் இதுவரைகாலமும் கடமையாற்றிவரும் வைத்திய நிபுணர்களே தயவுசெய்து இந்த மண்ணுக்கு வாருங்கள்.

## கூட்டுறவுச் சங்கங்களில் கொள்ளை--

கடந்த மூன்று மாதங்களில் இருபதிற்கும் மேற்பட்ட கொள்ளைச் சம்பவங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் நிகழ்ந்துள்ளன. (இவை பற்றிய ஒரு பகுதிப்பட்டியலை 18/3/85 என்ற திகதியிட்ட கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் காணலாம்) இவை யாருடைய சொத்து? மக்களுடைய சொத்து. இவை யாருக்குச் சேவை செய்கின்றன? மக்களுக்கு சேவை செய்கின்றன இவற்றைக் கொள்ளை அடிப்பதால் யாருக்குப் பாதிப்பு? மக்களுக்குத்தான் பாதிப்பு. இவ்வாறான கொள்ளைகளினால் கூட்டுறவு நிறுவனமே மூடுவிழாப் போடப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்குச் சேவை செய்வதற்கென ஒழுங்கமைப்பைப் பெற்ற ஒரே ஒரு உணவு விநியோக நிறுவனம் கூட்டுறவுச் சங்கங்கள்தான். எனவே பல நெருக்கடிகளின் மத்தியிலும் இவை சீராக உணவு விநியோகம் செய்யக் கூடியவையாகும். அரசாங்கம் உணவு விநியோகத்தைச் சீர்கெடுப்பதற்குப் பல முயற்சிகளைச் செய்கிறது. உதாரணம் காங்கேசன்துறைத் துறைமுகத்தில் சீனிக்கப்பலுக்குள் ''பயங்கரவாதிகள்'' வெடிகுண்டு வைத்துவிட்டார்கள் என்று தானே வைத்துவிட்டுக் கூறியது. ஏனெனில் இதைச் சாட்டாகக் காட்டி உணவு விநியோகத்தைத் தடை படுத்துவதற்காகவாகும். நிலைமை இவ்வாறிருக்கையில் ஏதோ உள்ள உணவு விநியோகத்தையாவது தடைப்படும் வகையில் நடந்துகொள்வது சரியானதா? திட்டவட்டமாக மக்களின் வாழ்வை நிர்மூலமாக்குவதற்கான ஓர் அழிப்பு நடவடிக்கையே இதுவாகும். இந்த உணவு விநியோகங்களை மட்டுமன்றி நாம் கூட்டுறவு அடிப்படையில் விற்பனவு செய்ய வேண்டியவர்களாகவும் இருக்கும் நிலையில் இருக்கின்ற கூட்டுறவையே அழிக்கக்கூடிய முறையில் நடந்து கொள்வது முற்றிலும் பிழையானது.

படிப்பகம்

www.padippakam.com



## எரிபொருட் கொள்ளை--

கடந்த சில மாதங்களாக இடம் பெற்ற எரிபொருட் கொள்ளைகள் மேலும் தொடருமாயின் அதைச்சாட்டாக வைத்துக் கொண்டு அரசாங்கம் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தக்கூடும். அரசாங்கம் இவற்றை நிறுத்தாது என்பதற்கு ஒரு உதாரணத்தையும் காட்டமுடியாது. ஆனால் நிறுத்தும் என்பதற்கு பல உதாரணங்களைக் காட்டமுடியும். உதாரணம் வங்கிக்கிளைகள் பல மூடப்பட்டமை. எரிபொருட் தடை ஏற்படும் பட்சத்தில் போக்குவரத்து, விவசாயம், மீன்பிடி என்பன தடைப்படும். போக்குவரத்து தடைப்படும் பட்சத்தில் அன்றாட வாழ்க்கைக்கான போக்குவரத்தும், மற்றும் உற்பத்தி வேலைகளும் பாதிக்கப்படும் சேவை வழங்கும் தொழில் ஒன்றும் நிகழமுடியாது. அதாவது 'சமூகத்தின் தொழிற்பாடே இல்லாது போய்விடும். இவ் எரிபொருட்களைக் கொள்ளை அடிப்பதன் மூலம் தடைசெய்பவர்களால் சமூகத்தொழிற்பாடிற்கு ஏதாவது மாற்று வழிகளைக் காட்ட முடியுமா? சமூகத்தை உயிர் வாழ்நிலையில் வைத்திருக்கக்கூடியளவு ஏதாவது ஆக்கபூர்வமான மாற்றுவழிகளில் ஈடுபட்டுள்ளீர்களா? அப்படி ஏதாவது மாற்றுவழி உங்களிடம் இருந்தால் அதனை உங்களால் மக்களுக்கு நடைமுறையில் செய்து காட்ட முடிந்திருந்தால் நாம் உங்களைக் குறைகூறுவதற்கில்லை. ஆனால் அவ்வாறு எந்த நடைமுறையையும் காட்டவில்லை. எனவே எத்தகைய மாற்று வழிகளுமில்லாத இச்செயல்கள் வெறும் அழிப்பு நடவக்கைகள் தான். எந்த ஒரு நடவடிக்கையில் ஈடுபடும் போதும் எது முதலாம் பட்சம் என்பதைக் கருத்திற்கொள்ளவேண்டும். சமூகத்தின் ஜீவாதாரம் முதலாம் பட்சம். எனவே அதனைப் பாதிக்கக்கூடிய அளவில் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது. எரிபொருட் கொள்ளைகள் நிகழமலே எதிர்காலத்தில் எதிரி திடீரென எரிபொருள் விநியோகத்தை நிறுத்தக்கூடும். அதற்கு முன்னமே நாம் மாற்றுவழிகளை வளர்த்தெடுக்கவேண்டும். எனவே இதற்கான மாற்றுவழிகளை உருவாக்கமுதல் நாங்களாகவே இதனை நிறுத்திவிடக்கூடாது. எனவே இது சம்பந்தமாக பொறுப்புடன் சிந்தித்துச் செயற்படவேண்டும். இதில் ஈடுபடுபவர்கள் தங்களின் உடனடித்தேவைகளை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படாது சமூகத்தின் முழுத்தேவைகளையும் நீண்டகாலக் கண்ணோட்டத்தோடு கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். எனவே இவ்வாறு சமூகத்தின் முழுத்தேவைகளையும் நீண்டகாலக் கண்ணோட்டத்தையும் கொண்டு இதனை ஒரு அழிப்பு வேலை என்று கூறவேண்டியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

9

## தபால் தொலைத் தொடர்புச் சேவையும் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்களும்--

தபால் தொலைத் தொடர்பு என்பன மக்களின் ஜீவாதார வாழ்வோடு தொடர்புற்றிருக்கின்றன. இத்தொடர்புகள் அறக்கூடிய வகையான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மக்களின் ஜீவாதார வாழ்வைப் பேணக்கூடிய வல்லமை உள்ளவராக இருக்க வேண்டும். தங்கள் நடவடிக்கைகளின் விளைவால் மக்களுக்கேற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களுக்கு வழிகாட்ட முடியாதவர்கள், அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. கையில் துப்பாக்கிகளை வைத்துக் கொண்டு நாங்கள் ஏதோ செய்கின்றதைச் செய்கின்றோம்; நீங்கள் ஏதோ படுகிறதைப் பட்டுப்பாருங்கள் என்று நடந்து கொள்வதல்ல விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்குதல் என்பது. இதற்காக இழப்புகளில்லாமல் போராட்டமில்லை என்று கொச்சையாகப் பதிலளித்துவிடக்கூடாது. இழப்புகளைத் தவிர்க்கக்கூடிய வரை தவிர்க்கக்கூடியவற்றைத் தவிர்க்கவேண்டும். தபாற்சேவை வாகனக் கடத்தல், தபால்நிலையக் கொள்ளைகள் என்பன தபாற் சேவையைப் பெரிதும் ஸ்தம்பிதமடையச் செய்துள்ளன. இதனால் ஒரு பகுதி மக்களுக்கு பொருளாதாரரீதியான சுமைகளும், வாழமுடியாத நிலைகளும் ஏற்பட்டுள்ளது. இவை மக்கள் மத்தியில் சினத்தையும், வெறுப்பையும் இயக்கங்கள் மீது தோற்றுவிக்கும்.

மேலும் சேவை வழங்கும் துறைகள் ஸ்தம்பிதமடையக்கூடியவாறான நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது. உதாரணமாக விவசாயத் திணைக்களத்தின் வாகனங்களைக் கடத்துவதால் விவசாய நலன்கள் பாதிக்கப்படும். எனவே இதுவரை மேற்கூறிய அனைத்தும் அழிப்பு வேலைகளும் வாழ்வை ஸ்தம்பிதமடையச் செய்யும். வேலைகளும் என்பது தெளிவு. அழிப்பு வேலைகளுக் கூடாகத்தான் போராட்டம் முன்னேறமுடியுமென்ற ஒரு கருத்துமுண்டு. அக்கருத்து சரியானதா என்பதை ஆராய்வோம்.

## அழிப்பு வேலைகள் போராட்டத்தை முன்னேற்றுமா அல்லது பின்தள்ளுமா?--

அரச இயந்திரம் ஸ்தம்பிதமடைந்து அதன்மூலம் சீர்குலைவுகள் ஏற்படும் போது எமது போராட்டம் முன்னேற்றமடையும் என்று கருதி அழிப்பு வேலைகளைச் சிலர் நியாயப்படுத்துகிறார்கள். ''சட்டமும் ஒழுங்கும் சீர்குலையும் போது புரட்சி மலர்வ

படிப்பகம்

www.padippakam.com



தற்கான சூழ்நிலை கனிந்து விட்டதென்பது பொருள்'' என்று லெனினின் கருத்தொன்று உண்டு. ஒரு வேளை இக்கருத்தை முழுமையாக விளங்கிக் கொள்ளாமல் அழிப்பு, ஸ்தம்பித வேலைகளுக்குச் சாதகமான ஓர் கருத்தாகக் கொள்கிறார்களோ தெரியாது எவ்வாறுயினும் இக்கருத்தை அவற்றிற்குரிய சந்தர்ப்பத்தில்வைத்து ஆழமாக விளங்குதல் எமது சூழ்நிலையில் எமது போராட்டத் தேவைகளை விளங்கத்துணைபுரியும்.

1789-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சி மலர்வதற்கு முன்பு அங்கிருந்து வந்த சட்டமும், ஒழுங்கும் குலையத் தொடங்கியது. 1917-ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஒக்டோபர் புரட்சி மலரமுன்பும் அவ்வாறே அங்கிருந்து வந்த சட்டமும் ஒழுங்கும் குலையத் தொடங்கியது. சட்டமும் ஒழுங்கும் என்பது ஒரு சமூக பொருளாதார அமைப்பையும் அதற்குரிய அரசியல் ஆதிக்கத்தையும் பாதுகாப்பதற்காக உருவாகிய அம்சங்களாகும். ஓர் குறித்த அரசியல், சமூக, பொருளாதார அமைப்பு மேலும் அச் சமூகம் முன்னேறுவதற்கு உகந்ததல்ல என்னும் போது, அதாவது பரந்த பெரும்பான்மை மக்களின் நலன்களுக்கு அச் சட்டங்கள், ஒழுங்குகள் தடையானவையாய் இருக்கின்ற போது அச்சட்டங்களையும் ஒழுங்குகளையும் மக்கள் மீறுவார்கள். அதற்குரிய அரச இயந்திரத்தைத் தாக்குவார்கள். இவ்வாறு இருந்த பழைய ஒழுங்கு சீர்குலைந்து ஆட்சி கவிழ புரட்சியாளர் ஆட்சியைக் கைப்பற்றி புதிய சட்ட ஒழுங்கை உருவாக்குவார்கள். இந்த அர்த்தத்தில் தான், இந்த வரலாற்று ஓட்டத்தில் தான் புரட்சிக்கு முன்பு இருந்து வந்த சட்டமும் ஒழுங்கும் குலையத் தொடங்கும் என்று லெனின் குறிப்பிட்டார்.

இதன்படி தமிழ்ப் பிரதேசத்தில் சட்டமும் ஒழுங்கும் குலைந்து விட்டது. ஆனல் ஆட்சியாளர் இங்கு இன்னும் வீழ்ச்சியடையவில்லை இது ஏன்? இதற்கு எமது போராட்டத்தின் சூழ்நிலையிலுள்ள வித்தியாசமே காரணம் அதாவது ஒரு முழு நாட்டுக்குமான புரட்சியின் போது அந்நாட்டில் நாடு பூராகவும் சட்டமும் ஒழுங்கும் குலையும்போது அரச இயந்திரம் ஸ்தபிதமடைய ஆட்சியாளர் வீழ்ச்சியடைந்து விடுவர். அப்போது அங்கு நிலவி வந்த ஆட்சி அதிகாரம் புரட்சியாளர்களை நோக்கிக் கைமாறும். ஆனல் எமது போராட்டம் அப்படியல்ல எமது போராட்டம் ஆட்சியதிகாரத்தைக் கைமாற்றுவதற்கான முழு நாடும் தழுவிய போராட்டமல்ல. மாருக நாம் இதுவரை காலமும் இருந்து வந்த அரசிலிருந்து விடுபட்டுத் தனியான ஓர் அரசை அமைப்பதற்கான போராட்டம். ஆட்சியாளன் இத்தீவில் வாழும் 2/3 பங்கி

www.padippakam.com



ஊராகிய சிங்கள பௌத்த மக்கள் மீது தனது பலத்தைக் காட்டி வைத்திருக்கிறான். எனவே சிறுபான்மையாகிய தமிழ் மக்கள் வாழும் பகுதியில் ஏற்படும் குலைவு அரசை வீழ்த்தப் போதுமானதல்ல. (ஆயினும் நீண்டகாலப் போக்கில் இது வளர்த்தெடுக்கும் முரண்பாட்டால் அரசு தெற்கிலும் வீழும்). முழுத்தேசமும் தழுவிய ஓர் புரட்சியின் போது எவ்வளவுக்கு சட்டமும் ஒழுங்கும் குலைகிறதோ அவ்வளவுக்கு அரசு வீழும். ஆனால் ஒரு தேசமாக கூடி வாழ்ந்த பல்லின மக்கள் கொண்ட ஓர் அரசிலிருந்து ஓர் இனம் பிரிந்து தனியான அரசு அமைக்கப்போராடும் போராட்டத்தில் சீர்குலைவுகள் எல்லையைத் தாண்டி மக்களின் ஜீவாதார வாழ்வைப் பாதிக்கக் கூடியளவிற்கு வளரும் போது மக்களுக்கு போராட்டத்தின் மீது நம்பிக்கையிலமை உருவாகும். இந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டு ஜீவாதார வாழ்வு சீர்குலைய முடியாதவாறும் அதனைப் பேணுமாறும் அல்லது மாற்றுவழிகளை உருவாக்குமாறும் தான் நாம் நடந்து கொள்ள முடியும்.

உண்மையில் எமது மண்ணில் அரசின் ஓர் பகுதி வீழ்ந்து விட்டது. சட்டமும் ஒழுங்கும் குலைந்த நிலையில் அரசு தனது நிர்வாக பரிபாலனத்தை இழந்துள்ளது. ஆனால் அதே வேளை அது தனது இராணுவ அதிகாரத்தில் மட்டும் தங்கியுள்ளது. இராணுவத்தை வீழ்த்தும் நிலைக்கு நாங்கள் இன்னும் வளரவில்லை. எங்கள் சக்திகளை நாங்கள் ஒருங்கிணைக்கவில்லை. எங்களுக்கான பரிபாலன அமைப்புக்களை நாங்கள் சிறிதளவாவது உருவாக்கவில்லை. எனவே இவ்வாறான வல்லமையை நாங்கள் அடையும் வரை அதனை வீழ்த்துவதற்கான சகல பலத்தையும் பெறும்வரை நாங்கள் உயிர் ... ழ வேண்டும். இந்த வகையில் எமது ஜீவாதாரத் தேவைகள் முக்கியமானவை காணப்படும் சகலவளங்களையும் (அதாவது அரசாங்கத்தின் நிறுவனங்கள், எங்களுடைய நிறுவனங்கள் என்பவற்றையெல்லாம் வளம் என்று கொள்கிறோம்) பயன்படுத்தி எமது ஜீவாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்த வகையில் தான் சேவை வழங்கும் துறைகள் அரசாங்கத்தினுடையதோ, அரசாங்கத்தின் அல்லாததோ அவ்வாறான சகல நிறுவனங்களையும் சீர்குலைக்க வேண்டாமென்றும் அதனை சாத்தியமானவரை எமது தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் வற்புறுத்த வேண்டியுள்ளது.

அரசு தன் ஒரு பகுதியை எமது மண்ணில் இழந்துவிட்டது என்பதை மேலே கவனித்தோம் அதில் இருந்து வந்த சட்டமும், ஒழுங்கும், சமூகமும் குலைந்துள்ளது என்பதை நோக்கினோம். இந்தக் குலைந்த பகுதி இன்னும் வெறுமையாகத்தான் இருக்

படிப்பகம்

www.padippakam.com


கின்றது. இந்தக் குலைந்த பகுதியில் நாங்கள் சோஷலிஸத்திற்கான புரட்சிகரமான ஓர் ஒழுங்கமைப்பை, ஓர் பரிபாலனத்தை உருவாக்கி இருக்கிறோமா? இந்த இடத்தில் குலைவுக் கூடாக நாம் புரட்சிகரமான புதிய ஓர் சோஷலிஸ சமூக அமைப்பிற்கான அடிப்படையை உருவாக்க வேண்டியதே முக்கியமானது. இதில் ஆக்கபூர்வமான பணியில் ஈடுபட்டுக்கொண்டு வரும்போது அரசாங்கத்தின் தொடர்புகள் எதுவுமில்லாமல் எமது ஜீவாதாரத் தேவைகளை நாம் நிறைவேற்றிவிடுவோம். இதனைச் செய்வதற்குப் பதிலாக ஜீவாதாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான படைப்புக்களில் ஈடுபடுவதற்குப் பதிலாக நாம் உள்ள ஜீவாதார வளங்களை அழிக்கலாமா? சேவையை வழங்குவதற்குப் பதிலாக உள்ள அரைகுறைச் சேவைகளைக்கூட அழிப்பதில் ஈடுபடுவது மிகமிகத் தவறானது.

## வாகனக்கடத்தல், ஆட் கடத்தல், பணயம் வைத்தல், தனியார் கொள்ளைகள்:-

வாகனக்கடத்தல், ஆட்கடத்தல், பணயம் வைத்தல், ஆலயங்களிலும், தனியார் உடமைகளிலும் கொள்ளையடித்தல் என்பன நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. இவற்றை யார், ஏன் செய்கிறீர்கள்? உங்கள் சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிலவும் குழப்பமான சூழ்நிலையைப் பயன்படுத்தி இவற்றைச் செய்து போராட்டத்தையே நலிவடையச் செய்கிறீர்கள். சோஷலிஸ சிந்தனை ஒன்று உங்கள் மூளைக்குள் இருப்பதாக எண்ணிக்கொண்டு முதலாளிகளின் சொத்துக்களைத் தானே கொள்ளை அடிக்கிறோமென்று எண்ணிக்கொண்டு இதனைச் செய்கிறீர்கள். உண்மையில் உங்களது இச்செயல்கள் (ஆட்கடத்தல், பணயம் வைத்தல், கொள்ளை அடித்தல்) வர்த்தகர்களை அணி திரட்டி அவர்களை மேலும் பலமுள்ளவர்களாக்கும் செயல்களே தவிர சோஷலிஸத்துக்குத் துணைபுரியும் செயல்களல்ல. கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கடையடைப்புக்களில் ஆங்காங்கே கடைகளுக்கருகாமையில் நான்கு குண்டுகளை வெடிக்கவைத்துத்தான் கடையடைப்புக்கள் முழு வெற்றி பெறவேண்டி இருந்தது. ஆனால் 16/3/85 அன்று யாழ்நகரில் மேற்கொள்ளப்பட்ட கடையடைப்பு ஒரு குண்டுகூட வெடிக்கவைக்காமல் 'இயக்கத்திற்கு' எதிராக நடைபெற்ற வெற்றிகரமான கடையடைப்பாகும். தொடர்ந்து நான்கு நாட்களுக்கு கடையடைப்பு நிகழ்ந்தால் மக்களின் வாழ்வு ஸ்தம்பிதமடைந்துவிடும். மக்கள் போராட்டத்தின் மீது தான் வெறுப்படைவார்கள். நீங்கள் மேற்கொள்ளும் பிழையான

படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கைகளினால் வர்த்தகர்களை அணிதிரட்டப்பட்ட ஓர் சக்தியாக்குவதுடன் போராட்டத்தையும் குழிதோண்டிப் புதைக்க முற்படுகிறீர்கள். நீங்கள் சோஷலிஸத்திற்குத் துணைபுரிபவர்களல்ல. சோஷலிஸத்துக்குத் துரோகம் செய்பவர்கள்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் வர்த்தகர்கள் முற்போக்கான பாத்திரம் வகிக்கக்கூடிய ஓர் சக்தியாகும். அவர்களைப் போராட்டத்துடன் இணைத்து போராட்டத்தில் வெற்றியீட்டுவதற்குப் பதிலாக அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் அவர்களைப் போராட்டத்திலிருந்து பிரிப்பது மட்டுமன்றி அவர்களைப் போராட்டத்திற்கு எதிரானவர்களாகவும் மாற்ற முற்படுகிறீர்கள். வரலாற்றில வளர்ச்சிக் கட்டங்களைக் கருத்தில் எடுத்து அதற்கேற்ற முறையில் வரலாற்றை வழிநடத்தவேண்டும்.

இன்று போராளிகள் என்று சொல்லிக்கொண்டு சில இயக்கங்கள் தங்களின் கையிலுள்ள ஆயுதங்களைக் காட்டி மக்களை அச்சுறுத்தி தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்துவருகிறார்கள். இந்த வகையில் இன்று நிகழும் அநாவசியமான வாகனக் கடத்தல்கள் குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருநாளும் மிகத்தொகையாக வாகனங்களைக் கடத்திச்செல்கிறீர்கள். எதற்காக? உங்களினது தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென்று சொல்வதைவிட வேறு என்னவென்று சொல்வது? மக்களின் அனுமதியின்றி மக்களிடமிருந்து ஒரு துரும்பைத்தானும் எடுக்கக்கூடாதென்பது போராட்டத்தில் ஓர் முக்கிய ஒழுக்கமாகும். இதற்கு உதாரணமாக ஒரு வரலாற்றுச் சம்பவமொன்றைக் கூறலாம். ஒரு புரட்சிப் போராட்டத்தின் கெரில்லாத் தலைவன் ஒருவன் தனது கெரில்லா வீரர்களை படையெடுப்பில் வழிநடத்திச் செல்லும் போது கெரில்லா வீரர்கள் அக்கிராம மக்களின் அனுமதியைப் பெறாமல் அங்கிருந்த குளம் ஒன்றில் மீன் பிடித்துவிட்டார்கள். அதனைக்கண்ட கெரில்லாத் தலைவன் மக்களின் அனுமதியில்லாமல் மீன் பிடித்ததற்காக தனது கெரில்லா வீரர்களைத் தண்டித்ததுடன் தனது படைகள் அவ்வாறு தவறு செய்தமைக்காக தானும் ஒரு நேர உணவை உட்கொள்ளாதுவிட்டான். இயக்கங்களே! இவற்றைக் கொஞ்சம் சிந்தியுங்கள். மக்கள் மீதான உங்கள் ஆயுதம் தாங்கிய அட்டகாசங்களை நிறுத்துங்கள். மக்களை வற்புறுத்தி எதனையும் பெறக்கூடாது.

இயக்கங்களே! உங்களின் வெறும் ஆயுதம் மட்டும் அரசியல் என்று எண்ணாதீர்கள். மக்கள் ஆயுதங்களை எதிர்த்து வீழ்த்தக்கூடிய வல்லமை உள்ளவர்கள். கடந்த சில மாதங்களாக

படிப்பகம்

www.padippakam.com



ஆயுதம் தாங்கிய இளைஞர்களின் அட்டகாசங்களை எதிர்த்து ஆங்காங்கே அவற்றிற்குரிய இயக்கங்களின் பெயர்களைச் சொல்லி வெளிப்படையாகவே அவ்வியக்கங்களுக்கெதிராகப் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார்கள். சில உதாரணங்கள் பின்வருமாறு:- 14-1-85 அன்று வட்டக்கச்சியில் ''மக்களைத் துன்புறுத்தாதீர்'' என்ற தலைப்பிலான கையெழுத்துப் பிரதிகளையும் விநியோகித்தவாறு குறிப்பிட்ட ஒரு இயக்கத்திற்கெதிராக மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரை ''மக்கள் முன் விசாரணை செய்'' என்று வேண்டி 27-2-85ல் மக்கள் தெல்லிப்பளை வறுத்தலைவிளானில் குறிப்பிட்ட ஒரு இயக்கத்திற்கெதிராக மேற்கொண்ட கண்டன உண்ணாவிரதம். சென்ற வருடம் வயோதிபர் ஒருவர் நியாயமின்றி இயக்கப்போராளிகளால் தாக்கப்பட்டது தொடர்பாக குப்பிளான் மக்களால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம். இம்மாத ஆரம்பத்தில் தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் கொள்ளை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் போராளிகளால் தாக்கப்பட்டபோது மரணமடைந்ததால் குமுறியெழுந்த ஏழாலை மக்கள். 26-3-85 அன்று திருநெல்வேலியில் ''இயக்கத்தின் பெயரில் இளைஞர்களையும், யுவதிகளையும் மோசம் செய்யாதீர்'' என்று கோஷித்தவாறு மக்களால் குறிப்பிட்ட ஒரு இயக்கத்திற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

## சூழ்நிலையைப் பயன்படுத்தி எதிர்ச்சக்திகளின் தலையெடுப்பு:-

இவ்வாறு இன்று இங்கு ஏற்பட்டிருக்கும் குழப்பநிலையை பயன்படுத்தி போராட்டத்திற்கெதிரான தீயசக்திகள் திடீரெனத் தலையெடுத்துள்ளன. போராட்டம் முன்னேறிக் கொண்டு போன போது வாயடைத்து பதுங்கிக் கொண்டவர்கள் இப்பொழுது மீண்டும் தலையெடுத்துப் போராட்டத்தைக் கண்டிக்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். இயக்கங்கள் சில தவறுகளை விடுகின்றன என்பது உண்மைதான் ஆனால் அதற்காக போராட்டத்தைக் கைவிட முடியாது, அதனைப் பின்தள்ள முடியாது. எனவே சமூகப்பற்றுள்ள ஒவ்வொருவரும் போராட்டத்தை முன்னேற்ற உழைக்க வேண்டும். இயக்கங்களுக்குள் உள்ள முழு இளைஞர்களையும் தவறனவர்கள் என்று சொல்ல வரவில்லை. தவறனவர்களும் சரியானவர்களும் பல்வேறு இயக்கங்களுக்குள்ளும் இருக்கின்றார்கள் எனவே இந்தக் கருத்துக்கள் எந்தவொரு இயக்கத்துக்குள்ளும் இருக்கின்ற சரியானவர்களைப் புண்படுத்தக் கூடியதாய் அமையாது

படிப்பகம்

www.padippakam.com



எனவே இந்த நெருக்கடியான கட்டத்திலிருந்து போராட்டத்தை முன்னேற்ற அனைவரும் உழைக்க வேண்டும். தவறு செய்தவர் கூடத் தவறிலிருந்து திருந்திப் போராட்டத்தை முன்னேற்றப் பாடுபடுங்கள்.

## இத்தகைய பிழைகள் நிகழ்வதற்கான காரணமென்ன ?---

மேற்கூறிய தவறான நடவடிக்கைகள் பெரும்பளவு இயக்கங்களின் மத்தியில் இருந்து தான் தோன்றி உள்ளன என்பதை உணரமுடிகிறது. இவ்வாறான தவறான நடவடிக்கைகளில் அவை ஈடுபடுவதற்கான காரணம் இயக்கங்களிடமுள்ள அரசியல் வறுமை. அவர்களிடம் விடுதலைக்கான ஒரு வேலைத்திட்டமின்மை, இயக்கங்களுக்கிடையேயான போட்டியின் நிமித்தம் இடம் பெற்ற தவறான ஆட்சேகரிப்பால் இயக்கங்கள் ஒரு கூடம்பமாக மாறியுள்ளமையும் அடிப்படையில் ஆயுதம் மட்டும அரசியல், இளைஞர் மட்டுமே மக்கள் என்ற தவறான போக்குமாகும்.

பல்வேறு இயக்கங்களையும் சேர்ந்த உறுப்பினர்களே உங்கள் தலைமைப் பீடங்களிடம் விடுதலைக்கான வேலைத்திட்டத்தைச் சமர்ப்பிக்குமாறு கேளுங்கள். அப்போது உங்களுக்கு உண்மை புரியும். ஆனால் உங்கள் கேள்வியைத் திசை திருப்புவதற்காகக் கோமாளித்தனமாக சில இயக்கத் தலைவர்கள் சில பதில்கள் சொல்வார்கள். அதில் ஒன்று '' இரண்டு மாதத்தில் தமிழீழம் காண்போம்'' என்னும் பதிலாகும். அப் பதிலில் நீங்கள் ஓர் மூடபக்தியை வைத்துத் திருப்தியடைந்து விடுகிறீர்கள். இப்படி எத்தனை இரண்டு மாதங்கள் போய் விட்டனவென்று நீங்கள் திரும்பிப் பார்த்தால் உங்கள் கையில் உங்களுக்கு விடையுண்டு. ''அடுத்த மே தினக் கொண்டாட்டம் தமிழீழத்தில் தான்'' என்று 1980 ஆம் ஆண்டு அமிர்தலிங்கம் கூறிய வாக்குறுதியையும் மிஞ்சி விட்டது இயக்கத்தலைமைப் பீடங்கள் கூறும் வாக்குறுதிகள். இப்போது இயக்கங்கள் செய்யவேண்டியது விடுதலைக்கான ஒரு வேலைத் திட்டத்தை வகுப்பது. அது வெறும் இராணுவ வேலைத்திட்டமல்ல, அரசியல், சமூக, பொருளாதார, ஸ்தாபன, இராணுவ அம்சங்கள் அனைத்தையும் தழுவிய, மக்களையும் தழுவிய வேலைத் திட்டம்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் வெறும் துப்பாக்கிப் பயிற்சி மட்டும் போராட்டமாகி விடாது. முதலில் அனைவரும் உயிர் வாழ்வதற்கான ஜீவாதார அடிப்படைகளை நிறைவேற்ற

படிப்பகம்

www.padippakam.com



வேண்டும். எனவே இயக்கங்கள் உற்பத்தியில் ஈடுபடவேண்டும் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். உற்பத்தியில் இயக்கங்கள் ஈடுபடாமல், சமூகத்தின் மொத்த உற்பத்தியை அதிகரிப்பதற்கான எந்த வேலைத்திட்டத்தையும் வகுக்காமல் இயக்கங்கள் எதுவும் வழிகாட்டியாக இருக்கவும் முடியாது, இயக்கங்கள் வளரவும் முடியாது. எனவே மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இயக்கங்கள் இணைய வேண்டும். அன்றாட வாழ்வில் பங்கெடுக்க வேண்டும். துப்பாக்கியைத் தூக்கி இராணுவத்தைச் சுடுவது மட்டும் விடுதலைப் போராட்டமல்ல, மக்கள் வாழ்விற்கான ஆக்கபூர்வமான பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும். ஒரு முழுநாடும் தழுவிய புரட்சியிலிருந்து ஒரு தேசிய இனம் ஒரு அரசியலிருந்து பிரிந்து புதிய அரசு அமைப்பதற்கான போராட்டம் வித்தியாசமானது அந்த வித்தியாசத்தை உணர்ந்து அதற்கேற்ற ஓர் வேலைத்திட்டத்தை வகுத்தால் மேற்கூறிய தவறுகளும் இடர்பாடுகளும் ஏற்படாது தவிர்க்கலாம்.

## உடனடியாக இவற்றைத் தடுப்பதற்கு என்ன வழி?

மேற்கூறிய அழிப்பு வேலைகளும், ஸ்தம்பித வேலைகளும், தவறானவை என்பது தெளிவானது. இத் தவறான நடவடிக்கைகளுக்குத் தாங்கள் பொறுப்பல்லவென்று இயக்கங்கள் தனித் தனியே மறுக்கின்றன. எனவே இது சம்பந்தமான ஒரு தீர்வுக்கு பின்வருமாறு வரலாம்.

அதாவது இது ஒரு பொதுவான பிரச்சனை. இது சம்பந்தமாக ஒரு பொதுவான முடிவுக்கு எல்லோரும் வரலாம். எனவே இது சம்பந்தமான எல்லா இயக்கங்களின் பிரதிநிதிகளும் சமூகத்திலுள்ள பிரதானமான பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஒன்று கூடி இதனை விவாதித்து ஜனநாயக அடிப்படையில் ஒரு முடிவுக்கு வர வேண்டும். இதில் கலந்து கொள்ளும் சகல பிரதிநிதிகளும் சேர்ந்து ஒரு பொதுவான குழுவைத் தெரிவு செய்து அப்பொதுவான குழுவே இப்பிரச்சனை சம்பந்தமான முழு அதிகாரமுள்ள அமைப்பாக உருவாக்கப்பட வேண்டும்.

சோசலிஸம் என்பது ஓர் புதிய சமூக அமைப்பு, ஓர் புதிய பண்பாடு. இதுவரை காலமும் மனிதகுலம் கண்ட பண்பாடுகளுல் சோஷலிஸப் பண்பாடே ஒருமையானதும், மேன்மையானதும், ஒவ்வொரு போராளியும் தன்னை சோஷலிஸப் பண்பாட்டின் பிரதிநிதியாக்கிக் கொள்ள வேண்டும். இன்று போராளிகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் இளைஞர்களின் பண்பாட்டையும், பழக்க வழக்கங்களையும் பார்த்து சோஷலிஸமென்றால் ஓர்

படிப்பகம்

www.padippakam.com



அடாவடித்தனமா என்று எண்ணி மக்கள் வெறுப்படைகிறார்கள் சோஷலிஸப் பண்பாட்டை நாம் அமைப்பது இலகுவான காரிய மல்ல. ஏனெனில் நாங்கள் முதலாளித்துவ சமூக அமைப்பிலும் சூழலிலும் தான் வாழ்கிறோம். இந்தச் சூழலில் எங்களை அறியா மலே முதலாளித்துவ சிந்தனையும், முதலாளித்துவ எண்ணங்க ளும், குப்பை கூழமான முதலாளித்துவ வாழ்க்கைப்போக்கும் வளரும். முதலாளித்துவ அமைப்பிலுள்ள பத்திரிகைகள், சஞ்சி கைகள், வானொலி, தொலைக்காட்சி, நாவல்கள், திரைப்படங்கள் ஆகிய சகல பொதுஜனதொடர்புசாதனங்களும், முதலாளித்துவ சமூக எண்ணங்களையும், சிந்தனைகளையும், முதலாளித்துவ விழுமி யங்களையும் எங்களுக்குள் இடையறாது விதைத்துக்கொண்டே இருக் கிறது. முதலாளித்துவ சமூக அமைப்பிற்குரிய பெருமைகள் வரட்டு கௌரவங்கள், உயர்வு தாழ்வு மனப்பான்மை, மனித சாரம்சத்தை மதியாமை, சில வெறித்தனமான போக்குகள் என் பன எங்களுக்குள் மிகச்சாதாரனமாக வளர்ந்திருக்கும். இதனை நாங்கள் உணர வேண்டும். இப்பிடிகளிலிருந்தும் இச் சீரழிந்த கலாச்சாரத்தில் இருந்தும் விடுபட்டு சோஷலிஸக் கலாச்சாரத்தின் பிரதிநிதிகளாய் மக்களுக்கு வாழ்ந்து காட்டி சோஷலிஸத்தின் மீது மக்களுக்குப் பற்றை, கவர்ச்சியை ஏற்ப்படுத்த வேண்டும். எனவே எங்கள் மூளைக்குள் நிறைந்து கிடக்கும் குப்பை கூழ மான எண்ணங்களையும், சிந்தனைகளையும் களைந்து சோஷலிஸப் பண்பாட்டுக்குரிய வேலைத்திட்டத்தினை சகல ஸ்தாபனங்களும் உருவாக்க வேண்டும். சோஷலிஸப் பண்பாட்டுக்குரியவனாக ஒவ் வொரு கணமும் சுயசிந்தனையில் ஈடுபட்டு மக்களிடம் சோஷலிஸ எண்ணங்களையும், பண்பாட்டையும் வளர்க்க வேண்டும்.

ஆயுதம் மட்டும் தான் அரசியல் என்பதிலி ருந்து சமூகத்தின் முழு அம்சங்களும் தழுவிய செயற்பாட்டிற்கு மாற வேண்டும். இளைஞர் மட்டும் தான் அரசியல் என்பதில் இருந்து சமூகத்தின் முழு மக்களையும் தழுவிய நிலைக்கு மாறவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# "தமிழ் மக்களின் அவலக்குரல்"

எனும் பிசுரத்திலிருந்து...

"மக்களுக்கு அரசியல் போதனையும், தெளிவும் ஊட்டப்பட்டு போராட்டத்தில் அவர்களின் பங்கு உணர்த்தப்பட வேண்டிய பாரிய பொறுப்பை எந்த இயக்கமும் முழுமையாகச் செய்து முடித்ததாகத் தெரியவில்லை. மாறாக மக்களை குழப்பத்திலும், அறியாமையிலும் ஆழ்த்தி விடுதலையிலேயே விரக்தியுற்று, வேதனை மிஞ்சி சொந்த வாழ்க்கையையாவது கவனிப்போம்என அந்நியப்பட்டுப் போகும் நிலைக்குத் தள்ளி விடுகின்றன".

- தமிழ் மக்கள் -

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஆயுதம் மட்டும்தான் அரசியல் என்பதிலிருந்து
சமூகத்தின் முழு அம்சங்களும் தழுவிய
செயற்பாட்டிற்கு மாறவேண்டும்.
இளைஞர் மட்டும்தான் அரசியல்
என்பதிலிருந்து சமூகத்தின்
முழு மக்களையும் தழுவிய
நிலைக்கு மாறவேண்டும்.

படிப்பகம்